සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved History

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	**வரலாறு**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

01. பொலன்னறுவை கல்விகாரையைக் கட்டிய மன்னன் ..... ஆவார்.

02. உலகில் மிகவும் பழமையான எழுத்துத் தொகுதியைக் கண்டு பிடித்தவர்கள் ..... மக்களாவார்.

03. ஆபிரிக்காப் பிரதேசத்தில் வாழும் ஹோமோசேபியன் இன மக்கள் ..... என அழைக்கப்படுவர்.

04. விஜயனும் அவனுடைய எழுநூறு தோழர்களும் ..... எனும் துறைமுகத்தில் வந்திறங்கினர் என மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றது.

05. வலகம்பாகு மன்னன் ..... தூபியைக் கட்டினான்.

(வலகம்பாகு / ஜேதவனராமய / நீக்ரோயிட் / ஒஸ்ரிலொயிட் / அபயகிரி / மகா பராக்கிரமபாகு / மொசப்பத்தேமியா / சிந்து நதி / தம்பபண்ணி / மன்னார்)

- **6 – 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் முன்னால் அடைப்பினுள் இடுக.**

06. மகாவம்சத்தை எழுதிய நூலாசிரியர் மகாநாம தேரர் ஆவார். (.....)

07. மானிட பரிணாமம் எனப்படுவது புவியில் மனிதன் தோன்றுவதைக் குறிப்பதாகும். (.....)

08. தூபாராம தூபிக்கு வட்டதாகே ஒன்றை நிர்மாணித்த மன்னன் வசபன் ஆவான். (.....)

09. மனிதன் முதன் முதலில் நெருப்பை பயன்படுத்தியமைக்கான ஆதாரம் சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டது. (.....)

10. மொசப்பத்தேமியாவின் வட பகுதியில் வாழ்ந்த அசீரியர்கள் சிறந்த வர்த்தகர்களாவர். (.....)

Past Papers Wiki

- **11 – 15 வரையான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. புவியானது விண்ணிலிருந்த தூசிப்படலத்திலிருந்து தோன்றியது. அந்த தூசிப்படலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
    1. வால் நட்சத்திரம் 2. நிகாரிகா 3. லாவா 4. பக்டீரியா

12. இலங்கையில் முதலாவது புத்த சமயத்தை ஏற்ற பிக்குணிப் பெண் யார்?
    1. அனுலாதேவி 2. சோமாதேவி 3. கல்யாணவதி 4. லீலாவதி

13. துட்டகைமுனு மன்னனுக்கும் எல்லாளனுக்கும் இடையில் இறுதியாக போர் இடம் பெற்ற பிரதேசம் யாது?
    1. அநுராதபுரம் 2. புலஸ்திபுரம் 3. தீகவாபி 4. விஜிதபுரம்

14. முஸ்லிம்கள் தமது சமய விழாக்களைக் கொண்டாடுவதற்காகக் காலங்களை அளவிடும் முறை யாது?
    1. கிறிஸ்து வருடம் 2. புத்த வருடம்
    3. ஹிஜ்ரி வருடம் 4. கிறிஸ்துக்கு முன்

15. சங்கமித்தைப் பிக்குணி வெள்ளரச மரக்கிளையுடன் இந்நாட்டில் வந்திறங்கிய துறைமுகம் யாது?
    1. கோகர்ண 2. மகாதித்த
    3. லங்காபடுண 4. ஜம்புகோளப்பட்டிணம்

- **16 – 20 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளை இடைவெளியில் எழுதிப் பூரணப்படுத்துக.**

16. இறந்த தமது உறவினர்களின் மரணச் சடங்குகளை நடாத்துவதற்கு மனிதன் பழகிய யுகம் ..... ஆகும்.

17. முதன் முதலில் இறப்பர் பந்து ..... நாகரிகத்திற்கு உரியவர்களால் செய்யப்பட்டது.

18. புத்த பெருமானின் போதனைகள் முழுவதும் உள்ளடங்கியிருப்பது ..... ஆகும்.

19. மின்னேரியாக்குளத்தைக் கட்டிய மன்னன் ..... ஆவான்.

20. பண்டுகாபய மன்னனின் புதல்வன் ..... ஆவான்.

(2x20=40 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயம்.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**

(01) A) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



i. அநுராதபுர இராசதானி அமைந்துள்ள இடத்தினை அடையாளம் காட்டியுள்ள எழுத்து யாது?


ii. வெள்ளரச மரக்கிளை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட துறைமுகத்தைக் காட்டும் எழுத்து யாது?

iii. இறுதி இராச்சியமான கண்டி இராச்சியம் குறிப்பிட்டுள்ள எழுத்து யாது?

iv. திருகோணமலைத் துறைமுகம் எந்த எழுத்தால் காட்டப்பட்டுள்ளது?

(4 புள்ளிகள்)

B) பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த ஹோமோசேபிய இன மக்கள் உலகில் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்ததாகக் குறிப்பிடும் பின்வரும் உலகப்படத்தை அவதானித்து உரிய இனத்தவர்களுக்குரிய எழுத்தை தெரிவு செய்து எழுதுக.



1. கொக்கசொயிட்
2. நீக்ரோயிட்
3. ஒஸ்ரலொயிட்
4. மொங்கொலொயிட்

(4 புள்ளிகள்)

C) பின்வரும் உருக்களைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.



A

i. A எனும் உருவிலுள்ளது யாது?

ii. இது எங்கே அமைந்துள்ளது?

iii. இதில் வைக்கப்பட்டுள்ளவை யாது?

iv. இதன் முக்கியத்துவம் ஒன்றைக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

D i. B எனும் உருவிலுள்ளதைப் பெயரிடுக.

ii. இது எந்த நகரத்தில் அமைந்துள்ளது?

iii. இதனை வேறு எப்பெயரால் அழைப்பர்?

iv. இதனைக் கட்டிய மன்னன் யார்?

(4 புள்ளிகள்)



(02) i. பின்வரும் பயிர்கள் முதலில் நடப்பட்ட நாடுகளைக் குறிப்பிடவும்.

A - சோளம்

B - கோதுமை

C - நெல் (3 புள்ளிகள்)

ii. பழைய கற்கால மனிதனின் கலாசார வளர்ச்சியில் தெளிவாகக் காணக்கூடிய பண்புகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. இடைக்கற்கால மனிதனின் வீடுகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது? (4 புள்ளிகள்)

(03) i. பின்வரும் நாகரிகங்களுக்கு உரித்தான பிரதேசங்கள் தற்பொழுது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A - மொசப்பத்தேமிய நாகரிகம்

B - சிந்து நதி நாகரிகம்

C - எகிப்திய நாகரிகம் (3 புள்ளிகள்)

ii. மொசப்பத்தேமிய சமூகம் நான்கு பிரிவுகளைக் கொண்டது. அப்பிரிவுகள் நான்கினையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. எகிப்திய நாகரிகம் சம்பந்தமாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் இடைவெளிகளைப் பூரணப்படுத்துக.

ஆட்சி செய்த அரச பரம்பரை	A .....
B	மிருகங்களினதும் பொருட்களினதும் உருவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட எழுத்து
பிரதான ஜீவனோபாயம்	C .....
எகிப்தினை ஆட்சி செய்த பேரழகியான பெண்	D .....

(4 புள்ளிகள்)

(04) i. சிந்து நதி நாகரிக மக்கள் உபயோகித்த உலோக வகைகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. சிந்து நதி நாகரிகத்திற்கு உட்பட்ட முக்கிய நகரங்கள் நான்கும் எவை? (4 புள்ளிகள்)

iii. சிந்து நதி நாகரிக மக்கள் நீர் முகாமைத்துவத்தின் போது மேற்கொண்ட நடைமுறைகள் இரண்டு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(05) i. கற்காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக் கோலத்தின் பண்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

ii. விஜயனோடு இந்நாட்டுக்கு வந்த அமைச்சர்கள் இருவரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பின்வரும் வினாக்களுக்கு சுருக்க விடை எழுதுக.

A - விஜயன் மற்றும் குவேனியின் இரு பிள்ளைகள்.

B - இயக்கர் வாழ்ந்த இரண்டு பிரதேசங்கள். (4 புள்ளிகள்)

(06) i. மகிந்த தேரருடன் இந்நாட்டுக்கு வந்த தேரர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. தேவநம்பிய திஸ்ஸ மன்னனின் சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. துட்டகைமுனு மன்னனின் சிறந்த சேனாதிபதிகள் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(07) i. வலகம்பாகு மன்னனின் சகோதரர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. தாதுசேன மன்னன் கட்டிய குளமொன்றையும் கால்வாய் ஒன்றையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. பண்டுகாபய மன்னனின் முன்மாதிரியான சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

PAST PAPERS WiKi
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank